**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரைக்குடி**

**முன்னிலை: செல்வி.C.ஜெயப்பிரதா, B.Sc., B.L.,(Hon's)**

நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ), காரைக்குடி

2025–ம் ஆண்டு மார்ச் திங்கள் 25–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**Domestic Violence Case 119/2022**

**CNR NO:TNSV19-004390-2022**

**in**

**Crl.MP.No.11/2025**

1. D.லதா (வயது.36/2024)

2. கனுஷிகா மைனர் (8)
(மேற்படியாரின் தாயாரும்
இயற்கை காப்பாளருமான
1ம் மனுதாரர் மூலம்) .... மனுதாரர்கள்/ மனுதாரர்கள்

/எதிர்/

G.ஜெயக்குமார், ....எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது 02.01.2025–ம் தேதியன்று கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.T.K.கோபாலன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு கேட்கப்பட்டும், வழக்கின் கோப்புகளையும் சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இன்று (25.03.2025) இந்நீதிமன்றம் வழங்கிடும்.....

**<u>உத்தரவு</u>**

1) மனுதாரர்கள் தரப்பில் குடும்ப வன்முறைச் சட்டம் 2005 பிரிவு 23 மற்றும் 20ன் கீழ் கீழ் 1, 2 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் மருத்துவச் செலவு, கல்வி கட்டணம், உணவு, உடை, வீட்டு வாடகை மற்றும் அன்றாட அத்தியாவசிய செலவிற்கும் வழக்கு நடத்துவதற்கும் இடைக்கால ஜீவனாம்சமாக 1 மற்றும் 2 மனுதாரர்களுக்கு மாதம் தலா ரூ.15,000/–வீதம் மொத்தம் ரூ.30,000/–த்தை

இடைக்கால ஜீவனாம்சமாக வழங்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, கடந்த 16.09.2015ம் தேதியன்று காரைக்குடி சூடாமணிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள RM.V மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின் போது மனுதாரருக்கு 42 பவுன் நகைகளும், சீர்வரிசை சாமான்களும் கொடுத்ததாகவும், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் பயனாக கனுஷிகா என்ற 8 வயது பெண் குழந்தை உள்ளதாகவும், எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு துபாய் நாட்டில் Karma Technology Fanar" என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்ததாகவும், மனுதாரர் தன்னையும் தன் குழந்தையையும் துபாய்க்கு அழைத்துச் செல்ல பலமுறை கேட்டும் எதிர்மனுதாரர் அழைத்துச் செல்ல மறுத்துவிட்டார் என்றும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மனுதாரருக்கு திருமணத்தின் போது கொடுத்த சீர்வரிசை பணம் போதவில்லை என்றும் மேலும் பணம் வாங்கி வருமாறு , எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் அடித்து சித்ரவதை செய்து கொடுமைப்படுத்தி மனுதாரரையும், அவரது குழந்தையையும் வீட்டைவிட்டு துரத்திவிட்டதாகவும், எதிர்மனுதாரர் வெளிநாட்டில் பணிபுரிந்து மாதம் ரூ.1,50,000/- வரை சம்பளம் பெற்று வருவதாகவும், எதிர்மனுதாரர் அவரது தொழில் மூலம் வட்டித் தொழில் செய்து மாதம் ரூ.4, 00,000/- வரை சம்பாதித்து வருவதாகவும், எதிர்மனுதாரர் மதுரையில் சொந்த வீட்டில் வசித்து வருவதாகவும், எதிர்மனுதாருக்கு சொந்த ஊரான சேடப்பட்டியில் அசையும், அசையா சொத்துக்கள் உள்ளதாகவும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) மனுதாரரும் அவரது குழந்தையும் வயதான பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரர் தன்னை மனைவி என்ற முறையிலும், 2ம் மனுதாரருக்கு தகப்பன் என்ற முறையிலும் உணவு, உடை, இருப்பிட வசதி, மருத்துவ வசதி கல்விச் செலவு செய்து கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரருக்கும் அவரது குழந்தைக்கும் அன்றாட அத்தியாவசிய செலவிற்கும், வழக்கு நடத்துவதற்கும்

இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் தலா ரூ.15,000/–வீதம் ரூ.30,000/–இடைக்கால ஜீவனாம்சமாக வழங்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்–**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, கடந்த 16.09.2015 ம் தேதியன்று காரைக்குடி சூடாமணிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள RM.V மஹாரில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின் போது மனுதாரருக்கு 42 பவுன் நகைகளும், சீர்வரிசை சாமான்களும் கொடுத்ததாகவும், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் பயனாக கனுஷிகா என்ற 8 வயது பெண் குழந்தை உள்ளதாகவும், எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு துபாய் நாட்டில் Karma Technology Fanar" என்ற நிறுவனத்தில் வேலை செய்து வந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) திருமணத்தின் போது எதிர்மனுதாரர் துபாயில் கர்மா டெக்னாலஜிஸ் எல்எல்சியில் தரக் கட்டுப்பாட்டாளராகப் பணிபுரிந்ததாகவும், பிரதான மனு எண். DVC No.119/2022 லும், தான் தேவகோட்டை சப்கோர்ட்டில் HMOP எண்.21/2022 ல் விவகாரத்து மனுவை தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் இருப்பதாகவும், HMOP யில் பதிலளித்த பி.லதா வழக்கை நடந்த முன்வராத காரணத்தால் தேவகோட்டை சார்பு நீதிமன்றம் விவகாரத்து ஆணையை 06.06.2024 ம் தேதி வழங்கியது என்றும், 1 ம் மனுதாரர் AWPS காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்ததாகவும், விசாரணையின் போது 1 வது மனுதாரர் சீதனப் பொருட்கள் மற்றும் நகைகள் அனைத்தையும் 1 ம் மனுதாரரின் தந்தை பெற்றதற்கு எழுத்துபூர்வமாக ஒப்புதலை அளித்தார் என்றும், 2 வது மனுதாரரான மகள் காரைக்குடியில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியில் படித்து வருகிறார் என்றும், மேட்ரிகுலேஷன் பள்ளிகளுடன் ஒப்பிடும்போது மேற்கண்ட பள்ளி பெயரளவு பள்ளிக்கட்டணத்தை வசூலித்தது என்றும், எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) 1 ம் மனுதாரர் தொடர் துன்புறுத்தல் காரணமாக எதிர்மனுதாரர் வேலையில்

கவனம் செலுத்த முடியவில்லை என்றும், நிர்பந்தம் மற்றும் குடும்ப நலன் கருதி வேலை தேடி மதுரை வந்ததாகவும், 1 வது மனுதாரர் மகிழ்ச்சியான திருமண வாழ்க்கை நடந்த ஒத்துழைக்காத காரணத்தால் மீண்டும் துபாய் சென்றதாகவும், எதிர்மனுதாரர் தொடர்ந்து வேலை செய்யாத காரணத்திற்காக நிறுவனம் குறைந்த தர வேலையை எதிர்மனுதாரருக்கு வழங்கியது என்றும், தற்போது டேட்டா என்ட்ரி எழுத்தராக வேலை செய்து வருவதாகவும், போக்குவரத்து தொகை மற்றும் தங்குமிடக் கட்டணத்தை நிறுவனம் பிடிப்பாக எடுத்துக் கொள்கிறது. ஜே,கே ஃபேன்ஸி ஸ்டோர்ஸ் என்ற பெயரில் ஃபேன்ஸி ஸ்டோர்ஸ் நடத்துவதால் சிரமத்துக்குள்ளானதாகவும், எதிர்மனுதாரர் அந்த கடனை வட்டியுடன் செலுத்த வேண்டும், ஒரு மகனாக நான் தனது வயதான பெற்றோரை கவனித்துக் கொள்ள வேண்டும் துபாயில் தனக்கு மாதம் சம்பளம் ரூ.80 ஆயிரம் மட்டுமே இதை வைத்து எதிர்மனுதாரரால் தன் குடும்பத்தை பராமரிக்க முடியவில்லை என்றும், எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) 1 வது மனுதாரர் சிவில் இன்ஜினியரிங்கில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்எ ன்றும் அவர் பி.எச்டி படிப்பை நிறுத்தியவர் என்றும், பி.எச்.டி படிப்பின் போது அவருக்கு மாதம் ரூ.30 ஆயிரம் உதவித்தொகை கிடைத்தது என்றும், 1 வது மனுதாரர் சண்முகநாதன் இன்ஜினியரிங் விரிவுரையாளராக பணிபுரிந்தார் என்றும், 1 வது மனுதாரரின் தந்தை காரைக்குடியில் நகராட்சியின் ஆலோசகர் மற்றும் முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர் என்றும், 1 ம் மனுதாரர் குடும்பம் காரைக்குடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருவதோடு போதுமான வீடு, மனை, சொத்துக்களைக் கொண்டவர் என்றும், எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனுதாரர்களுக்கு மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதா என்பதை பரிசீலனை வேண்டியது அவசியமாகும்.**

**<u>தீர்வு</u>**

**1)** வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இம்மனுவில் 1–ம் மனுதாரர் எதிர்மனுதாரின் மனைவி என்பதும், 2–ம் மனுதாரர் 1 மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரின் மகள் என்பதும், 1–ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.09.2015–ல்

திருமணம் நடந்தது என்பதும், அந்த திருமணத்தின் பயனாக, 2–ம் மனுதாரர் 05.12.2016 பிறந்தார் என்பது இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

2) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 2 ம் மனுதாரர் 05.12.2016–ல் பிறந்துள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்ட 21.03.2022 ம் ஆண்டு காலக்கட்டத்தில் 2–ம் மனுதாரர் பள்ளியில் படித்து வரும் 8 வயது குழந்தை என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் 2–ம் மனுதாரரைப் பொறுத்து இம்மனு அனுமதிக்கசுடியதா என்பதை பரிசீலனை செய்கையில், குடும்ப வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 23 ன் கீழ் பரிசீலனை செய்கையில், 2 ம் மனுதாரர் 8 வயதைக் கடந்த பெண் குழந்தையாக உள்ளதாகவும், அந்த குழந்தையை பராமரிக்கவும், கல்வி மற்றும் மருத்துவச்செலவுக்கும் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவராவார் என்பதால் 2–ம் மனுதாரரைப் பொறுத்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

3) 1–ம் மனுதாரர் மனுவில் கோரியுள்ளபடி மாதம் ரூ.30,000/–ஆயிரம் வீதம் எதிர்மனுதாரரிடமிருந்தது வாழ்க்கை பொருள் உதவி பெற தகுதியுடையவரா என்பதை பரிசீலனை செய்கையில், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரிடமிருந்து 1–ம் மனுதாரர் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், 2 ம் மனுதாரர் பெண் குழந்தை என்பதால் மாதந்தோறும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச் செலவுக்கு தேவைப்படுவதாலும், அதற்கு மாதம் ரூ.30 ஆயிரம் தேவைப்படுவதாகவும், எதிர்மனுதாரர் துபாயில் வேலை செய்து மாதம் 1,50,000/– வரை நல்ல வருமானம் ஈட்டி வருவதாகவும், வேண்டுமென்றே 1–ம் மனுதாரரை புறக்கணித்து வாழ்க்கை பொருள் உதவி வழங்கவில்லை என மனுவில் குறிப்பிட்டுள்ள நிலையிலும், மனுவின் சங்கதி மற்றும் மனுவின் ஆவணங்களை அனுசரித்தும், 2–ம் மனுதாரரின் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச் செலவு போன்ற காரணிகளை அனுசரித்தும், எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதி முதல் நாளது தேதி வரையும், மனுதாரர்களுக்கு பராமரிப்பு செலவு செய்யவில்லை என்று அறிய முடிகிறது. இருவருக்கும் இடையே விவகாரத்து நடைப்பெற்றதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி விவகாரத்து எதிரவரில்லா தீர்ப்பு என்றும், அதில்

இம்மனுதாரர்களுக்கு எவ்வித பொருளுதவியும் வழங்கப்படவில்லை என அறிய முடிகிறது. மேலும் விவகாரத்து நடைபெற்றிருந்தாலும், அப்பெண் வேறொரு திருமணம் செய்து கொள்ளாத வரை எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை பராமரிக்கக் கடமைப்பட்டவராவார். மனுதாரர் பட்டப்படிப்பு படித்திருந்தாலும் குழந்தை பிறந்த பின்னர் அக்குழந்தையை பராமரிப்பதற்காக வேலைக்குச் செல்லவில்லை என்று வாதத்திலிருந்து அறிய முடிகிறது. எனவே எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வாழ்க்கை பொருளுதவி தர கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/-மும்(ரூ.பத்தாயிரம்) 2ம் மனுதாரருக்கு மாதம் ரூ.15,000/-மும் தர கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவாக,</u>

**1) மனுதாரர்களைப் பொறுத்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

**2) எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு மாதம் ரூ25,000/- ஆயிரம் வீதம் மனு தேதி முதல் நாளது தேதி வரை செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று (25.03.2025 )திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒ.ம்/செல்வி.C.ஜெயப்பிரதா, B.Sc., B.L.,(Hon's)**
**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**காரைக்குடி,**